DEPOSITION OF WITNESS
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )
**O.S.No. 271/2013**

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : செல்லத்துரை |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 16.03.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 16th March 2026

**முதல்விசாரணை :**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இன்று இந்த வழக்கில் எனது சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் தரப்பு விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 20.11.1995 தேதிய வாதி முருகையா மற்றும் பிறரால் பெறப்பட்ட அசல் விற்பனை பத்திரம் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** சொத்து தொடர்பான வில்லங்கசான்றிதழ் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** 16.03.2013 அன்று தேவர்குளம் காவல்நிலையத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கொடுத்த மனுவின் நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** 26.03.2013 தேதியிட்ட தபசில் சொத்தை பொறுத்து அத்துமால் அளவை செய்யக்கொடுத்த மனுவின் நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1 ஆகவும்,** நீதிமன்ற ஆணையர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2 ஆகவும்,** நில அளவையர் தாக்கல் செய்த நிலஅளவையர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல்விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**